WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 6 ஜூன் 1998 கனி 11

ஆசிரியர்
B. அர்ஜூனன்

The Voice of Truth International
Volume 15

தேவனுடைய வார்த்தைக்கு உயர்வான மதிப்பு கொண்டுள்ளது.

தயக்கமில்லாத உறுதி கொண்டுள்ளது.

ஆத்துமாக்களைக் குறித்த உயர்வான பாரத்தையும் தரிசனத்தையும் கொண்டுள்ளது.

மற்றவர்களின் தேவைகளில் உயர்வான கரிசனை கொண்டுள்ளது.

தேவனுடைய பணியில் உயர்வான ஒரு மனப்பாங்கின் ஆவியைக் கொண்டுள்ளது.

தேவனுடைய ராஜ்யத்தில் சேவை செய்ய உயர்வான விருப்பம் கொண்டுள்ளது.

ஜெபம் மிக முக்கியமானது என நம்பிக்கை கொண்டுள்ளது.

தேவனிடத்திலும் அவரது வாக்குத்தத்தங்களிலும் உயர்வான விசுவாசம் கொண்டுள்ளது.

எதிர்காலத்திற்கான உயர்வான திட்டம் கொண்டுள்ளது.

ஒரு உயர்வான சபை

வேத அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்களுக்கு ஓர் நற்செய்தி.

கடந்த ஆகஸ்டு முதல் வெளிவந்த வேத அறிவுப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற ஒவ்வொருவருக்கும் **"மதுரை சென்ட்ரல் கிறிஸ்துவின் சபையார்"** ஒரு அழகிய பரிசு கொடுக்கக் காத்திருக்கின்றனர்.

Published by

WORLD LITERATURE PUBLICATIONS

Post Box No. 5

BATLAGUNDU - 624 202.

S. India.

கிறிஸ்துவின் வசனம்
WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 6 | ஜூன் 1998 | கனி 11

ஆசிரியருரை:

ராஜாதி ராஜா
King of Kings

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும் உன்னதத்தில் வாசம் பண்ணுகிறவருமாயிருக்கிறார். இப்போதும் நமக்கு ராஜாவாகவும், சபையின் தலைவராகவும் புது உடன்படிக்கையின் பிரதான ஆசாரியருமாயிருந்து நம்மைக் காத்து வழிநடத்தி வருகிறார்.

நம்முடைய தேவனாகிய கர்த்தர் உலகம் உண்டானது முதல் ராஜாவாக வீற்றிருந்து தம்முடைய ஜனங்களை நேசித்து வழி நடத்தி வந்தார். நாளடைவில் ஜனங்கள் எங்களில் ஒருவன் ராஜாவாக இருந்து எங்களை ஆள வேண்டுமென்று சாமுவேல் தீர்த்தரிசியிடம் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அப்பொழுது சாமுவேல் "அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் உங்களுக்கு விரோதமாய் வருகிறதை நீங்கள் கண்டபோது, உங்கள் தேவனாகிய கர்த்தரே உங்களுக்கு ராஜாவாயிருந்தும் நீங்கள் என்னை நோக்கி அப்படியல்ல, ஒரு ராஜா எங்கள் மேல் ஆளவேண்டும்'' (1 சாமு. 12:12) என்றீர்கள். நீங்கள் உங்களுக்குச் செய்த உங்களுடைய பொல்லாப்பு பெரிதென்று நீங்கள் கண்டு உணர்வீர்கள் என்றான்.

பிரியமானவர்களே, நம்முடைய முற்பிதாக்களை தேவன் கண்ணின் மணியைப் போல காத்து வந்தார். அப்படி வழி நடத்தி வந்தும் அவருடைய வார்த்தைக்குக் கீழ்படியாமல் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று அம்மோன் புத்தரரின் ராஜாவாகிய நாகாஸ் விரோதமாய் வருகிறதைக் கண்டபோது தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். இன்றும் அதே போல அநேக கிறிஸ்தவர்கள் மற்ற நிர்வாகங்களைப் பார்த்து நமக்கு ஒரு தலைவர் வேண்டும் என்றும், சபை குருக்கள் என்றும் அழைத்து அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" கொலோ. 1:18.

தேவன், நோவா காலத்தில் அக்கிரமம் மிகுதியானது என்று கண்டு பூமியை அழித்தது போல இந்தராஜாக்களின் ஆட்சியை

ஒரு முடிவுக்கு கொண்டு வந்து ஒரு நிலையான ராஜ்யத்தை அமைக்க உலக ராஜ்யங்களை அழித்தார். அதை தானியேல் தீர்க்கதரிசன புத்தகத்தில் வாசிக்கின்றோம். "அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார், அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை. ஓரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்து, இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொருக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" (தானி. 2:44). இவ்வசனத்தின்படி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ராஜாவாக வீற்றிருந்து தம்முடைய நிலையான ராஜ்யமாகிய ஆவிக்குரிய சபையை ஆண்டு வருகிறார்.

"பிலாத்து அவரை நோக்கி: நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரதியுத்தரமாக நீர் சொல்லுகிறபடி தான் என்றார்" (லூக். 23:3). ஆகையால் அவரை சிலுவையில் அறைந்து, இவன் யூதருடைய ராஜா என்று கிரேக்கு, லத்தீன், எபிரேயு எழுத்துக்களில் எழுதி அவருக்கு மேலாக வைத்தார்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக இருப்பதினாலும், வானத்திலும், பூமியிலும், சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டபடியினாலும் அவர் உயிர்த்தெழுந்தார். தேவன் அவரை எழுப்பி உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி அருள் செய்தார். பேதுரு தன் பிரசங்கத்தில் "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவீர்கள் என்றான்" (அப். 2:36). இந்தப் பேதுருவைப் பார்த்து "நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்றார்" (மத். 16:18).

"கர்த்தர் வாகனங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார். அவருடைய ராஜரீகம் சகலத்தையும் ஆளுகிறது" (சங். 103:19). பூமியை மட்டுமல்ல சர்வத்தையும் ஆளுகிறார் என்று பார்க்கிறோம். இப்படிப்பட்ட சர்வ வல்லவரை நம்முடைய நிலையான ராஜாவாக என்றென்றும் ஏற்று அவர் வழியில் நடக்கக்கடவோம். ஆண்டவராகிய இயேசு உலகத்தில் இருந்தார். உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. இன்றும் அனேகர் அவர் ராஜாவாக எங்கேயிருக்கிறார் என்று கேட்கின்றனர். அநேக கிறிஸ்தவர்கள் அவர் எருசலேமிலே ஆயிரம் வருடம் அரசாளுவார். அப்பொழுது உலகம் அவரது ஆளுகையின்கீழ் வருமென்று நினைக்கின்றனர். இப்பொழுதும் நமக்கு நிலையான ராஜாவாயிருந்து அவருடைய புது உடன்படிக்கையின் கட்டளைகளைக் கொண்டு நம்மை வழிநடத்தி வருகிறார் என்பதை அநேகர் புரிந்துகொள்ளாதிருப்பது மிக ஆச்சரியமான ஒன்றாக இருக்கிறது.

மே மாத இதழின் விடைகள்

1. மீகா	நியா. 18 : 31	6. மின்னலினால்	
2. தாவீது	1 நாளா. 16 : 3	7. மறைக்கிறது	
3. நியாயத்தீர்ப்புக்கு	மத். 5 : 22	8. தூதர்களினிமித்தம்	
4. எத்தியோப்பிய மந்திரி	அப். 8 : 36	9. நியாயப்பிரமாணமும்	
5. பிரிஸ்கில்லா, ஆக்கில்லா	ரோம. 16:3-4	10. ஆக்கினைக்குள்ளாக	

இம்மாத வேத அறிவுப் போட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடை மட்டும் எழுதி இம்மாதம் இறுதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. யாருடைய சூரிய கடிகாரத்தில் பாகைக்குப் பாகை இறங்கின சாயையைப் பத்துப் பாகை பின்னிட்டுத் திரும்புவேன் என்றார்?
2. எவன் தொல்லை ஒவ்வொருவரையும் இளைக்கப் பண்ணும்?
3. துன்மார்க்கரும் தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் எதிலே தள்ளப்படுவார்கள்?
4. உலகம் அவர் (இயேசு) மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை என்ன செய்யவில்லை?
5. கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன் என்றவன் யார்?
6. நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் யாரால் உண்டானவனல்ல?
7. மரித்துப்போன தீர்க்கத்தரிசி யாரைப் பார்த்து நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள் என்றான்? அத்தீர்க்கத்தரிசியின் பெயர் என்ன?
8. நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் யார் மரித்தது வீணாயிருக்குமே?
9. ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படுமா?
10. சமாரியா நாட்டு ஜனங்களை பிரமிக்கப்பண்ணிக் கொண்டிருந்த மாயவித்தைக்காரன் யார்?

சென்ற இதழின் Who Am Iன் விடை:

யோபு 1:1, 13-19, 10:2, 3, 9:18, 2:9, 23:3, 4, 42:1-6, 42:10-13, 42:17.

தேடி வந்த தெய்வம்!
The Lord, who came and searched

ஒருமுறை ஒரு பட்டணத்தின் வீதியிலே உலகின் மாபெறும் மனித தெய்வம் கடந்து வருகிறார் என்று ஒரு குள்ள மனிதன் கேள்விப்பட்டான். அவன் ஒரு அதிகாரி என்பதையும் நினையாமல் அந்த இதய தெய்வத்தை காண ஓடோடிச் சென்று ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறி, அந்த தெய்வீக மனிதனின் முகத்தையாவது பார்த்து விடுவேன் என்று காத்திருந்தான். பெரும் திரள்!! தூரத்திலேயே அவரைக் கண்டு, எட்டி எட்டிப் பார்க்கிறான். வருகிறார், அருகில் வருகிறார். அவன் இருந்த மரத்தின் அருகில் வந்துவிட்டார். நன்றாகப் பார்த்துவிட்டான். அவரின் தெய்வீக முகம் கண்டு சொல்லொண்ணா மகிழ்ச்சி அவனுக்கு.

ஆனால் நடந்ததோ? அந்த மனித தெய்வம் அவன் இருந்த மரத்தினருகில் வந்து நின்று மேலே பார்த்து "சகேயுவே, கீழே இறங்கி வா. நான் இன்று உன் வீட்டில் தங்கப் போகிறேன்" என்றார். ஆஹா, என்ன ஆச்சரியம், ஆனந்தம். யார்?! என் வீட்டிற்கா தெய்வம் வருகிறார்? என்று ஓடி வந்து அவரை அழைத்துச் சென்றான்.

"ஐயா என் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்கு தருவேன்" என கூறினான். நான் அநியாயமாய் (லஞ்சம், ஊழல்) வாங்கிய பணத்தை நான்கு மடங்கு திரும்பக் கொடுப்பேன் எனக் கூறி அப்படியே செய்தான்.

எப்படி இவன் வாழ்வில் மாறுதல் வந்தது? ஆம், மனுஷனை மீட்க வந்தவர் இயேசு அல்லவோ! இவன் வீடு தேடி வந்து மெய்யான உள் மனதில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுத்தார்.

ஆம். அருமையானவரே! உலகில் நீ இருக்கும் இடம் தேடி வந்த மாபெரும் தெய்வம் இயேசுவே! இவரைத் தேடி எங்கும் போகத் தேவையில்லை. அவர் உன்னைத்தேடி வருகிறார்.

மனதில் ஆறுதல் இன்றி நிம்மதியற்று சமாதானமில்லாமல், உன்னையே நீ சடங்காச்சார செயல்கள் மூலம் ஏமாற்றாதே. உன்னைத்தேடி வந்த தெய்வம் இயேசு அழைக்கிறார் (மத். 11 : 28). அவருடைய சமாதானம் பெற அழைக்கிறார், அவரைக் குறித்து முழுமையாகக் கேள்விப்பட்டு, இந்த சகேயுவைப் போல பழைய தவறான செயல்களை விட்டு மனம் திரும்பி, உன் வாயினால் இயேசுவை தேவமைந்தன் என்று அறிக்கையிட்டு அவருடைய வசனத்திற்கு திருமுழுக்கினாலே கீழ்ப்படி. அப்பொழுது உன் (உள்ளம்) வீட்டிலும் அவர் வருவார். இந்த உண்மையான நல்வாழ்வு பெற அழைக்கிறார்!

-Philo

"ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்த போது கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரை பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள்" (மத். 2:1-2). இதைக் கேள்விப்பட்ட ஏரோது ராஜாவுக்கு கலக்கம் உண்டாயிற்று. நமக்கு விரோதமாக ஒரு ராஜாவா! என்று எண்ணினான். தீர்க்கத்தரிசனத்தில் உரைக்கப்பட்டபடியே (ஏசா. 2:2-3), எருசலேமிலே முதல் முதல் (ராஜ்யமாகிய) சபை ஆரம்பிக்கப்பட்டது (அப். 2). கழுதையை தேடிப்போன சவுல் ராஜாவாகி, பின்பு ராஜ்ய பாரத்திலிருந்து தள்ளப்பட்டான். ஆனால் இங்கு தங்கள் வஸ்திரங்களைக் கழுதைக்குட்டியின் மேல் போட்டு இயேசுவை அதின் மேல் ஏற்றி "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்" (லூக். 19:38). இவரே இன்றும் நமக்கு நிலையான ராஜாதி ராஜாவாக இருக்கிறார்.

> கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்; பூமி பூரிப்பாகி, திரளான தீர்வுகள் மகிழக்கடவாது. சங். 97:1.

சுவிசேஷ ஊழியமே பதில்!
Evangelism Is The Answer!

சுவிசேஷத்தினுடைய கருத்தானது சுவிசேஷத்தைப் பிரசிங்கிப்பதோடும், பாவத்தினின்று ஆத்துமாக்களை மனந்திரும்பப் பண்ணுவதோடும், இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்துவதோடும் சம்பந்தப்பட்டுள்ளது. இது கிறிஸ்து எப்படி வாழ்ந்தார், எதை போதித்தார், அவரை பின்பற்றினவர்கள் எதை நடைமுறைப் படுத்தினார்கள் என்பதே ஆகும். முதல்முறையாக சுவிசேஷத்தினுடைய முழுச் செய்தியும் கி. பி. 33ல் பிரசிங்கிக்கப்பட்டது. அத்துடன் 30 ஆண்டுகளுக்கும் குறைவான ஆண்டுகளுக்குள்ளாக இது உலக முழுவதுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இது என்ன அற்புதமான சம்பவம்!

இயேசு தனிப்பட்ட தன் ஊழியத்தில் எங்கும் சுற்றித்திரிந்தார். கிராமங்களுக்கும், பட்டணங்களுக்கும் சென்றார். திரளான ஜனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் சுவிசேஷத்தை அறிவித்தார். ஆவிக்குரிய பாடங்களைப் போதிப்பதற்கு இயற்கை உவமைகளைப் பயன்படுத்தினார். ஒரு மனிதனும் இவ்விதமாய் ஒரு போதும் மிகுந்த அதிகாரத்துடன் போதிக்கவில்லை, தேவனுடைய வல்லமைகளை மிகத் தெளிவாக இவரது வல்லமையான செயல்களில் காண்பித்தது போல காண்பிக்கவுமில்லை. உண்மையிலே, இவர் தேவனுடைய குமாரன்.

இயேசு கிறிஸ்து தன்னுடைய மரணத்திற்கும், அடக்கத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் பின் தன் ஊழியத்தைத் தொடரும்படி பன்னிரெண்டு பேரை அழைத்து, அவர்களை அப்போஸ்தலராக தெரிந்தெடுத்து, அவர்களுக்குப் போதித்து அவர்களுக்குப் பயிற்சியளித்தார். அவருடைய கடைசி வார்த்தைகளில் சில, "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத்தேயு 28:19, 20). அவர் பிதாவினிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு சற்று முன்பு, அப்போஸ்தலரிடத்தில், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப் பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்போஸ்தலர். 1:8)

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்திற்கு திரும்பும்போது, யூதர்களின் பண்டிகை நாளான பெந்தெகோஸ்தே என்னும் நாளைக் கொண்டாடும்படி உலகமுழுவதிலிருந்து யூதர்கள் வந்திருந்தார்கள் எனப் பார்க்கிறோம். இச்சம்பவம் தற்செயலாக நடைபெற்றது அல்ல. கர்த்தர் இதைத் திட்டம் பண்ணினார். அப்போஸ்தலர் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்படும் பொருட்டு பரிசுத்த ஆவியின் பெலத்தைப் பெற்றுக்கொண்டனர். சுவிசேஷமானது முதன்முறையாக வல்லமையாக பிரசங்கிக்கப்பட்டது. இந்நாள் முதற்கொண்டு நற்செய்தியானது உலக முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டது. அந்நாளில் ஏறக்குறைய 3000 பேர் தேவ வசனத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, தங்களது பாவங்களுக்காக மனந்திரும்பி, சந்தோஷத்தோடே ஞானஸ்நானம் பெற்றார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.

ஆனால் இது ஆரம்பத்தில் நடந்தது. இதன் விளைவாக சுவிசேஷமானது மீண்டும் மீண்டும் எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் பிரசங்கிக்கப்பட்டது. அதன்பின் பிலிப்பு சமாரியாவில் பிரசங்கித்தான். அங்குள்ள அநேக புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.

அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் பிலிப்பு எத்தியோப்பியாவிலிருந்து வந்த ஒருவனுக்கு கிறிஸ்துவைக்குறித்து பிரசங்கித்தான் என்று வாசிக்கின்றோம். இதன் விளைவாக இது அவனுக்குள் மனந்திரும்புதலையும், அவன் தன் வீட்டிற்குத் திரும்பி வருகையில் சந்தேகமில்லாமல் கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கிக்க காரணமானவனாக இருந்தான். அப்போஸ்தலர் 8, 9ம் அதிகாரங்களில் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்தி கொலைசெய்த சவுல் என்ற

ஒருவனைக்குறித்து வாசிக்கின்றோம். ஆனால் அவனது மனந்திரும்புதலுக்குப் பின் அவன் கிறிஸ்துவை பிரசங்கிக்கிற சிறந்த பிரசங்கியாகவும் தன் மூன்று சுவிசேஷ பயணங்கள் மூலம் அநேக ஆத்துமாக்களை மனந்திரும்புகிறவனாகவும், ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் எண்ணற்ற கர்த்தருடைய சபைகளை ஏற்படுத்துகிறவனாகவும் விளங்கினான். குறிப்பு நமக்கு அப்போஸ்தலர் 10ம் அதிகாரத்தில் கொர்நேலியு, அவனது குடும்பத்தார் பற்றியும் - யூதரல்லாத அவர்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்ட பின் கிறிஸ்தவர்களாக மாறினது பற்றியும் கூறுகிறது. இப்பொழுதோ இரட்சிப்பின் சுவிசேஷமானது உண்மையிலேயே எல்லா மனுக்குலத்திற்கும் எடுத்துச் செல்லப்படுகிறது.

ஆயினும் ஆரம்பம் முதற்கொண்டு கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த துன்பம் வந்தது, பிரதான ஆசாரியர்களால் பேதுருவும், யோவானும் எச்சரிக்கப்பட்டார்கள். யூதமார்க்கத்தமைந்தவர்கள் கிறிஸ்துவைக் குறித்து பிரசங்கிக்கக்கூடாது என எச்சரித்தனர். ஆனால் இவைகளெல்லாம் சீஷர்களைத் தடுக்கவில்லை. ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டான். யாக்கோபு ஏரோதினால் பட்டயத்தால் கொல்லப்பட்டான். இச் செயல்களும், மற்ற காரியங்களும் கிறிஸ்தவம் பரவுவதைத் தடுக்க முடியவில்லை. எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல் சுவிசேஷம் அதிக வல்லமையாகப் பிரசங்கிக்கப்பட இவைகள் காரணமாயிற்று. துன்புறுத்தப்பட்டவர்கள் "பல இடங்களுக்கு சிதறிப் போனார்கள்," சிதறிப் போனவர்கள் "எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (அப்போஸ்தலர் 8).

இதன் விளைவாக 30 வருடங்களுக்கும் குறைவான வருடங்களில் சுவிசேஷமானது உலகமெங்கும் எடுத்துச் செல்லப்பட்டது (கொலோசெயர் 1:23). சில மக்கள் ஆதரவளித்தனர் ஆனால் அதிகமான தடைகளும் இருந்தன. அவர்கள் சுவிசேஷத்தைப் பெற்றிருந்தனர். ஆனால் வேத வசனத்தை எழுத்து வடிவில் பெற்றிருக்கவில்லை. நமது காலங்களில் இருப்பது போல அவர்கள் மற்ற இடங்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்கும், பரப்புவதற்குமான வழிமுறைகளைப் பெற்றிருக்கவில்லை. இதுவரையிலும் தேவன் கொடுத்த பெலத்தின்படி சுவிசேஷப் பணியைச் செய்து வந்தனர். இதனால் உலகமும் என்றென்றுமாக மாற்றப்பட்டது.

இன்று நாம் இவ்விதமான கனமான (ஊழியம்) பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளோம். உங்களுக்கும் எனக்கும் இது எவ்விதமான வேலை? இந்தப் பொறுப்பினை நாம் தனித்தனியே பெற்றுள்ளோமா? நாம் இதற்குக் கீழ்படியும்படி உத்தேசித்துள்ளோமா?

இன்றுவரை, அதிகமான தனிப்பட்ட கிறிஸ்தவர்களும், அதிகமான சபைகளும் கர்த்தருடைய பணியை மிகச் சிறிய அளவிலேயே செய்துள்ளது. அதன் விளைவாக நாம் அநேக பிரச்சனைகளை சபைக்கு வெளியேயும், உள்ளேயும் சந்திக்கிறவர்களாயிருக்கிறோம். நாம் செய்யும்படி அவர் நமக்குக் கட்டளையிட்டதை செய்தவறும் போது நாம் எப்படி தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாயிருக்க முடியும்?

நாம் ஒருபோதும் கற்றுக்கொள்ளப்பட மாட்டோமா? பல தீமைகள் நிறைந்த, தேவனற்ற, பொருளாசையுள்ள, அவிசுவாசமுள்ள உலகத்தைப் பாருங்கள். இத்தகைய காரியங்கள் எப்படி ஒருவனுக்கு நன்மை செய்யக் கூடும்? பாவத்தின் பெருக்கத்தினால் உலகம் மோசமான சூழ்நிலையில் வளர்ந்துவரும்போது கிறிஸ்தவர்கள் இந்த தீமையான விளைவுகளை சகிக்க முடியுமா? பிரச்சனைகள் நமது தனிப்பட்ட ஜீவியத்திலும், சபையிலும் தோல்வியை ஏற்படுத்திய போதிலும் அவர், நம்மை கர்த்தருக்கு ஒப்படைத்து அவரது பணியைச் செய்யும்படி நமக்குக் கட்டளையிட்டுள்ளார்.

நாம் எப்படி நம்மைச் சுற்றியுள்ள இந்த வேதனையை மாற்றலாம்? மனந்திரும்புதல் மூலமும், தீவிரமாய் உலக சுவிசேஷ ஊழியத்தை மேற்கொள்வதின் மூலமும் எளிதாக இந்த கொடூரமான நிலையை மாற்றலாம். சுவிசேஷ ஊழியமே இதன் பதிலாகும். இன்றே! இப்பொழுதே சரிசெய்வோம்!

J. C. Choate.

The Voice of Truth
International Volume II

நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மாற்கு 16:15.

மே மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் வெற்றிப் பெற்றவர்கள்

1.	N. தானியேல் தமிழ்வாணன்	-	மேல்விசாரம்
2.	G. அன்னலட்சுமி	-	கன்னியாகுமரி
3.	மேரியம்மாள்	-	வத்தலக்குண்டு
4.	J. மேரிஎலிசபெத் கலைவாணி	-	வத்தலக்குண்டு
5.	N. வின்சென்ட்	-	கண்ணன்குளம்
6.	T. ஜெயமணிகிருபா	-	கள்ளிக்குடி
7.	D. ஜாய் பிரிஸ்கில்லாள்	-	கள்ளிக்குடி
8.	T. டேவிட்	-	கள்ளிக்குடி
9.	S. சாராள்	-	குமாரபாளையம்
10.	K. இளங்கோ	-	குமாரபாளையம்
11.	S. மணிமேகலை	-	குமாரபாளையம்

HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

HINDI : Sunday 8-45 P.M. - 9-00 P.M., Thursdays, 9-00 - 9-15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

ENGLISH : Friday, 7-45 P.M. - 8-00 P.M. Speaker, J. C. Choate, Box 3815, New Delhi - 110049.

TELUGU : Sundays, Tuesdays, and Thursdays, 2-00 P. M. - 2-15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

TAMIL : Sundays, Tuesdays and Thursdays, 6-45 P.M. - 7-00 P.M. Speaker, P. R. Swamy, Box No. 8405, Bangalore - 560084.

MALAYALAM Fridays, 3-45 P.M. - 4-00 P.M. Speaker P. K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

KANNADA : Sundays, 1-45 P.M. - 2-00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Bangalore - 600 004.



Please write to these addresses for Bible Correspondence course, magazines, and other Christian literature in language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

MONTHLY MAGAZINE
Regd. No. 84661 - 92
Postal Regn. No. TN/DDL/19.

Edited by B. Arjunan on behalf of Church of Christ
2-2-102 D/5, Rajan Nagar, Batlagundu and Printed at Bharathi Computer Offset Press for Shanthi Printers Main Road, Batlagundu - 624202.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.

ஞாயிறு காலை 9-00 மணி
வியாழன் மாலை 6-45 மணி

கிறிஸ்துவின் சபை,
2-2-102-D/5, ராஜன் நகர்,
வத்தலக்குண்டு-624202.
திண்டுக்கல் மாவட்டம்.
போன்: (04543) 23278.

From
WORD OF CHRIST,
Post Box No. 5,
Batlagundu - 624202.
S. India.

To